**SOUTHAMPTON OXFORD NEONATAL TRANSPORT**

**தொலைபேசி: 01865 223344**

SONeT என்பது தேம்ஸ் வேலி மற்றும் வெசெக்ஸ் முழுவதும் ஒரு பிரத்யேக பச்சிளம் குழந்தைகளுக்கான போக்குவரத்துச் சேவையாகும், இது ஆக்ஸ்ஃபோர்ட் மற்றும் சவுத்தாம்ப்டன் ஆகிய இரண்டு மையங்களிலிருந்து செயல்படுகிறது. இப்பகுதியில் உள்ள புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவுகள் (NICU) பின்வருமாறு:

John Radcliffe Hospital, Oxford
Level 2, Newborn Care Unit
Women Centre
Headley Way
OX3 9DU
**கார் பார்க்கிங்:** 2a அல்லது 2
**தொலைபேசி:** 01865 223201

Princess Anne Hospital, Southampton
D level, Neonatal Intensive Care Unit
Coxford Road
SO16 5YA
**கார் பார்க்கிங்:** யெல்லோ கார் பார்க்கிங்
**தொலைபேசி:** 02381 208164

Queen Alexandra Hospital, Portsmouth
B6, Neonatal Intensive Care Unit
Southwick Road,
P03 6LY
**கார் பார்க்கிங்:** பிரதான நுழைவாயில் கார் பார்க்கிங்
**தொலைபேசி:** 02392 283231

SONeT சேவையைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து ஊழியர் உறுப்பினரிடம் பேசவும், குழு வழங்கிய கருத்துப் படிவத்தைப் பயன்படுத்தவும் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிகளின் மூலம் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்: Oxford Hub; sonettransport@ouh.nhs.uk அல்லது Southampton Hub; sonet@uhs.nhs.uk

SONeT v1.2 March 2025, Review Sep 2029

## தேம்ஸ் வேலி மற்றும் வெசெக்ஸ் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான நெட்வொர்க்




**எங்கள் நெட்வொர்க்கில் உள்ள மருத்துவமனைகள் (NICU-கள் தடித்த எழுத்துக்களில் உள்ளன)**

1) Milton Keynes University Hospital, Milton Keynes
☎: 01908 995591
2) **Oxford University Hospital, Oxford**
☎: 01865 223201
3) Stoke Mandeville Hospital, Aylesbury
☎: 01296 316115
4) Wexham Park Hospital, Slough
☎: 0300 6154533
5) Royal Berkshire Hospital, Reading
☎: 0118 3227430
6) Basingstoke and North Hampshire Hospital
☎ 01256 313686
7) **Queen Alexandra Hospital, Portsmouth**
☎ 02392 283231
8) **Princess Anne Hospital, Southampton**
☎ 02381 208164
9) Dorset County Hospital, Dorchester
☎ 01305251150
10) Royal Bournemouth Hospital, Bournemouth
☎ 03000 192330
11) St Richard's Hospital, Chichester
☎ 01243788122
12) St Mary's Hospital, Newport, Isle of Wight
☎ 01983 534337
13) Salisbury NHS Foundation Trust, Salisbury
☎ 01722425180
14) Royal Hampshire County Hospital, Winchester
☎ 01256313686

Tamil

**SOUTHAMPTON OXFORD NEONATAL TRANSPORT**

# சவுத்தாம்ப்டன் ஆக்ஸ்ஃபோர்ட் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கான போக்குவரத்து

(**S**outhampton **O**xford **Ne**onatal **T**ransport - SONeT)



## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் தகவல்கள் துண்டுப்பிரசுரம்

உங்கள் குழந்தை ஏன் வேறொரு மருத்துவமனைக்கு மாற்றப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள இந்தத் துண்டுப்பிரசுரம் உதவும். இது சவுத்தாம்ப்டன் ஆக்ஸ்ஃபோர்ட் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான அவசர போக்குவரத்து (SONeT) சேவை பற்றிய தகவலை உங்களுக்கு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

உங்கள் குழந்தையின் பெயர்:_______________

பிறந்த தேதி:________ பிறந்த போது இருந்த எடை:_________

உங்கள் குழந்தை பின்வரும் மருத்துவமனைக்கு மாற்றப்படுகிறது:

_________________________________

தொலைபேசி: ______________________

போக்குவரத்து குழு:____________ மையமாகும்

செவிலியர்:________________________

டாக்டர்/ANNP:__________________________

ஆம்புலன்ஸ் டிரைவர்:___________________

இது உங்களுக்கு மிகவும் மன அழுத்தம் நிறைந்த நேரம் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் எங்களால் முடிந்த அனைத்து வழிகளிலும் உங்களுக்கு உதவ முடிந்த அனைத்தையும் செய்வோம்.

## என் குழந்தை ஏன் வேறொரு மருத்துவமனைக்கு மாற்றப்படுகிறது?

உங்கள் குழந்தை சிறப்புச் சிகிச்சையைப் பெறுவதற்காகவோ (தற்போதைய மருத்துவமனையில் இச்சிகிச்சையைப் பெறுவது சாத்தியமில்லை என்பதால்) அல்லது உங்களையும் உங்களின் குழந்தையையும் வீட்டிற்கு அருகில் கொண்டு செல்வதற்காகவோ (திருப்பி அனுப்புதல்) வேறு மருத்துவமனைக்கு மாற்றப்படுகிறது.

ஒரு குழந்தையை வேறு மருத்துவமனைக்கு மாற்றுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. உங்கள் குழந்தையைப் பராமரிக்கும் குழுவும், SONeT குழுவும், இடமாற்றத்திற்கு முன் அதற்கான காரணங்களை உங்களிடம் விரிவாக விளக்குவார்கள்.

## மருத்துவமனை மாற்றத்தின் போது எனது குழந்தை எவ்வாறு கவனித்துக்கொள்ளப்படுகிறது?

உங்கள் மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் SONeT போக்குவரத்து குழுவைத் தொடர்புகொள்வார்கள், அவர்கள் பிரத்யேகமான வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்குச் செல்வார்கள். போக்குவரத்துக் குழுவில், ஒரு ஆம்புலன்ஸ் டிரைவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு மருத்துவர் அல்லது புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான மேம்பட்ட செவிலியர் பயிற்சி பெற்ற பயிற்சியாளர் (Advanced Neonatal Nurse Practitioner - ANNP) ஆகியோர் அடங்குவர், இவர்கள் அனைவரும் மருத்துவமனை மாற்றத்தின் போது நோய்வாய்ப்பட்ட குழந்தைகளைப் பராமரிப்பதற்காகச் சிறப்பாகப் பயிற்சி பெற்றவர்கள். இந்தக் குழு உங்களது குழந்தையின் உடல்நிலை நிலையானதாகவும், பயணத்திற்குத் தயாராகவும் இருப்பதை உறுதிசெய்யக் குழந்தையைப் பரிசோதிக்கும். இதில் சில மருந்துகளைத் தொடங்குதல், மருந்துக் குழாய்களைச் செருகுதல் மற்றும் குழந்தை சீராகச் சுவாசிக்க உதவுதல் ஆகியவை அடங்கும்.

## போக்குவரத்து உபகரணங்களை விளக்குதல்

SONeT உபகரணங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்ல தேவையான அனைத்தையும் வழங்குகிறது. இதில் பின்வரும் உபகரணங்கள் அடங்கும்;

- இன்குபேட்டர் - உங்கள் குழந்தையைச் சுற்றி ஒரு பெர்ஸ்பெக்ஸ் உறை, இது குழந்தைகளைச் சூடாகவும், சௌகரியமாகவும் வைத்திருக்கும்.
- வென்டிலேட்டர் - குழந்தையை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் சொல்லும்போது ஏற்படும் பொதுவான பிரச்சினைகளில் ஒன்று சுவாசப் பிரச்சினைகள். வென்டிலேட்டர் உங்கள் குழந்தையின் சுவாசத்தைச் சீராக இருப்பதை உறுதிசெய்ய உதவும்.
- மானிட்டர்கள் - இடமாற்றத்தின் போது உங்களின் குழந்தையின் நிலையைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியம். இதயத் துடிப்பு, சுவாச வீதம், வெப்பநிலை மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றை நாங்கள் கண்காணிப்போம்.
- மருந்துகளுக்கான சிரிஞ்ச்கள் - சில குழந்தைகளுக்குச் சிறப்பு மருந்துகள் அல்லது நரம்பு வழியாகச் செலுத்தவேண்டிய மருந்துகள் தேவைப்படுகின்றன, அவ்வாறு தேவைப்படும்போது SONeT குழு அவற்றை வழங்க முடியும். நீங்கள் வழங்கும் தாய்ப்பாலையும் எங்களால் எடுத்துச் செல்ல முடியும்.

உங்களின் குழந்தை மிகவும் பாதுகாப்பான கைகளில் உள்ளது.



SONeT குழு புறப்படத் தயாரானதும், உங்கள் குழந்தையை நீங்கள் பார்க்க முடியும். இந்தக் குழு உங்கள் குழந்தைக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து விளக்குவார்கள், மேலும் உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருப்பின் அதற்கும் பதிலளிப்பார்கள்.

உங்கள் குழந்தையைத் தொடுவதற்கோ அல்லது முத்தம் தருவதற்கோ பயப்பட வேண்டாம்.

## இடமாற்றத்தின் போது உங்களின் குழந்தையுடன் இருத்தல்

இடமாற்றத்தின் போது நீங்களோ அல்லது உங்கள் துணையோ உங்களது குழந்தையுடன் செல்ல முடியுமா என்பதை SONeT குழு உங்களுக்குத் தெரிவிக்கும்.

இது உங்களின் மருத்துவ நிலை, உங்கள் குழந்தையின் நிலை, இடம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளைப் பொறுத்தது. நீங்கள் பயணம் செய்ய முடிந்தால், ஒரு சிறிய கைப் பையை உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.

உங்கள் குழந்தை மாற்றப்படும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது, நீங்கள் அங்குச் செல்ல உங்களுக்கான போக்குவரத்தை நீங்களே ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கலாம். SONeT குழு உங்களுக்கு மருத்துவமனை தகவலை வழங்குவதோடு உங்களது தொடர்பு விவரங்களையும் பெற்றுக்கொள்ளும். ஆம்புலன்ஸைப் பின்தொடர முயற்சிக்காதது வேண்டாம், **ஏனெனில் அது மிகவும்** ஆபத்தானது.

உங்கள் குழந்தை பிறந்த மருத்துவமனையில் நீங்கள் இப்போதும் உள்நோயாளியாக இருந்தால், உங்கள் குழந்தை மாற்றப்படும் அதே மருத்துவமனைக்கு உங்களின் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு மாற்றப்படலாம். உங்கள் தற்போதைய நிலையைப் பொறுத்து இடமாற்றத்திற்கான நேரம் இருக்கும், மேலும் அது உங்கள் உள்ளூர் மருத்துவமனையால் ஏற்பாடு செய்யப்படும்.

உங்கள் குழந்தையுடன் மருத்துவமனைக்கு வந்துசேர்ந்தவுடன், SONeT குழு உங்களை அழைத்து, அவர்கள் வந்துசேர்ந்துவிட்டதாக உங்களுக்குத் தெரிவிப்பார்கள் (நீங்கள் அவர்களுடன் இல்லாதபட்சத்தில்). அனைத்து மருத்துவமனைகளும் பெற்றோர்கள் தங்களை அழைத்து அவர்களின் குழந்தையைப் பற்றி நலம் விசாரிக்கும்படி ஊக்குவிக்கின்றன. உங்களால் உங்களின் குழந்தையுடன் இருக்க முடியாவிட்டால், உங்கள் குழந்தையை சிகிச்சைக்காகப் பெறும் மருத்துவமனைக்கு வந்துசேர்ந்த 1-2 மணி நேரத்திற்குப் பிறகு அழைக்கும்படி பரிந்துரைக்கிறோம். இது உங்கள் குழந்தையை அமைதிப்படுத்தவும், உங்களுக்கு முழுமையான புதுப்பிப்பை வழங்கவும் குழுவிற்கு நேரம் அளிக்கிறது.

## குழந்தையை வீட்டிற்கு அருகில் அழைத்துச் செல்லுதல் (திருப்பி அனுப்புதல்)

உங்கள் குழந்தைக்கு இனி தீவிர சிகிச்சை தேவையில்லை என்றால், SONeT போக்குவரத்து சேவை உங்கள் குழந்தையை உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள மருத்துவமனைக்கு மாற்றும். உங்கள் குழந்தை வீட்டிற்குச் செல்லத் தயாராகும் வரை, உங்கள் உள்ளூர் மருத்துவமனை உங்களையும் உங்கள் குழந்தையையும் பராமரிக்கும்.

இது குறித்து உங்களுடனும், உங்கள் உள்ளூர் மருத்துவர் மற்றும் மருத்துவமனையுடனும் விவாதிக்கப்படும். திருப்பி அனுப்புவது குறித்து விரிவாக விளக்கும் வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.